# தமிழ்த்தேசியத் தந்தை பெருஞ்சித்திரப் பெரியோர்!...

(புறம் பெயர்ந்த சிறுதுளிகள்)

பேராசிரியர்

**அருளியார்**

**வேரியம்**

**புதுச்சேரி - 605 009**

# தொகைப் பாமுன் ஒரு சிறு கூற்று!....

கள்ளங்கரவு அறியாத மக்களுக்கு எதிராக, - இவ் வுலகில் நடந்த, ஏற்பட்ட, ஏற்படுத்திய, - செய்த, செய்வித்த நயனிலாக் கொடிய நடைமுறைகளுக்கு - ஒடுக்குமுறைகளுக்கு- சுரண்டலுக்கு - ஏய்ப்பு ஏமாற்றுகளுக்கு - வஞ்சிப்புகளுக்கு- இழிவுப்படுத்தப் போக்குகளுக்கு - நேர் நின்று எதிரராகி அவற்றுக்கான மீட்சிகளுக்கென, உரிமைக்கென, விடுபாடுகளுக்கென, விடுதலைக்கென தத்தம்மாலியன்ற வல்லெதிர்ப்புகளையும் - வழக்காட்டுக்களையும் - போராட்டங் களையும் - கடிய போர்களையும் - சட்டத் தண்டிப்பு, சிறைப்படுத்தம், வதைப்படுத்தம் முதலியன ஏற்றுத் தளராது நின்று பலவகையிலான ஈகங்களைச் செய்து நிலைகுலையாத மறநெஞ்சத் தூயவர்கள் - இவ்வுலகின்கண் அன்று தொட்டு அண்மைக்காலம் வரையிலாக இயங்கியோர் மிகப் பலராயினும்- அவர்களினும் தனிவகைப்பட்ட சிறப்புச்சீரும் உறப்புவீறும் நெகிழ்வு அன்பும் - செவ்விய மேம்பண்பும் - மானமும் தறுகண்மையும் கொண்ட - அறிவாற்றலும் வினையாற்றலும் - ஒருமையும் கொள்கை யோர்மையும் - தறுகண்மையும் செறிந்து எளிய பொதுமாந்தருள் ஒருவராகவே வாழ்ந்தியன்று, தன்னல மறுப்பொடும் தருக்கொடும் விடாப்பிடியொடும் - தம்மின மக்களின் மொழி – இன - நாட்டு நலன்களுக்கெனவே தாம் மூச்சுயிர்த்த வாணாட்காலத்திற் பெரும்பகுதியதாகிய ஓரைம்பானாட்டைக் காலத்தே - தூய மனைவி மக்களடங்கிய இல்லறப் பாரத்தைத் தம் தோண்மிசைச் சுமந்தவாறேயே அன்னோரையும் தாம் கொண்ட தொண்டூடு உடம்படச் செலுத்தி - தமராகிய அம் மகார்க்கென வந்து வாய்த்த மரூஉமக்களையும் அவ்வழியேயே நிலைநிற்கவும் நீண்டியங்கவும் ஆற்றுப்படுத்திச் செயலுக்கிறக்கி - தம்மாசிரியர் மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்அவர்களை உலகத் தமிழ் அரங்கில் முற்படுமாறு மேலோக்கி நிறுத்தி, அவரின் அறிவாக்கங்களை இம் மண் பயன்கொண்டு நலம்பெறத் தக்க வகையிலாகத் திட்டங்களறிவித்துச் செயற்படுத்தி, – தம் கோள் முடிபுகளாய இனம் – மொழி - நாட்டுநல மீட்சிக்கெனத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் எனும் பெயரிய மூன்று திங்களிதழ்களை அயராது அரும்பாடுபட்டுத் தொடர்ந்து இறுதிவரையிலாக வெளியிட்டுப் பரப்பி, (இவற்றுள் – ''தென்மொழி'' 293 இதழ்களும் – தமிழ்ச்சிட்டு - 217 இதழ்களும் - தமிழ்நிலம் 171 இதழ்களும் அவரால் புறப்படுத்தப்பெற்றன என்பது, ஈண்டு நினையத்தக்கதாகும்!) - முப்பதுக்கும் மேற்பட்ட அருந்திறப்

பயன்நூல்களை யாத்து வெளிப்படுத்தி – இத் தமிழக விடுதலைக்கென மூன்று மாநாடுகளை நடத்தி, - சிங்கை மலையகங்களில் (1974) இலங்கைத் தீவில் (1978) - இங்கிலாந்து, பிரான்சு, சுவிட்சர்லாந்து, கிழக்குசெருமனி, மேற்குசெருமனி எனும் ஐந்து ஐரோப்பியநாடுகளில் நந்தம் மக்கள் உணர்ந்து மகிழச் சிறப்புச்சொற்பொழிவுகளாற்றி, - “உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்” எனும் பெயரிலாகத் தம் கொள்கைச் செயற்பாட்டுக்கான இயக்க அமைப்பினைத் தோற்றுவித்து - தமிழகமெங்கணும் அதற்கான கிளைகளூன்றுமாறு பதித்துப் பரப்பி - தமிழின விடுதலைத் தீர்மானிப்புக் கருத்தரங்கு போலும் பல அரங்கநிகழ்வுகளை நடத்தி - இந்திராகாந்தி சாம்பல் வழிபாட்டினையெதிர்த்தும் - தமிழ் வழிபாட்டு உரிமை வேண்டியும் நயன்மன்றங்களேறி வழக்குகளிட்டு - நூற்றுக்கணக்கினவாகத் தமிழ்த் திருமணங்களைத் தலைமையேற்று நிகழ்த்தியொளியேற்றி - மொழியினநாட்டு நலங்கருதித் தமிழகமெங்கணும் பல்வேறு இயக்கங்களிற் பங்கேற்றுச் சொற்பொழிவுகளாற்றி - பல்வேறு பள்ளிகள் கல்லூரிகள் ஏற்பாடுசெய்த கல்வி நிகழ்வரங்குகளிற் பங்கேற்று மாணாக்கர்க்கு வழிகாட்டி, - தமிழக நலம்நாடி இயங்கிய பல்வேறு இயக்கங்களொடு தொடர்புகொண்டு ஒருங்கிணைப்பு ஏற்படுத்தி இயக்கி, - தமிழக விடுதலைக் கூட்டணியை உருவாக்க முயற்சிகளெடுத்து - ஈழவிடுதலைக்கான மிகப்பல பொருந்திய போராட்டங்களில் முன்னணித் தொண்டராகப் பங்கேற்றுத் துணை செய்து - ஈழத்தின் விடுதலைக்கென அரிய கட்டுரைகளையும் ஆற்றல்சான்ற பாஆக்கங்களையும் உருவாக்கி வெளியிட்டுப் பரப்பி ஊக்குவித்து - ஈழஇயக்கங்களுக்கிடையேயிருந்த பிணக்குகளைப் போக்கி ஒருங்கிணைத்தற்கெனப் பல்வேறு வினைகளில் ஈடுபட்டு, – அவ் விடுதலைப் போராளிகளுக்கு உறுதுணையாயிருந்து வழிகாட்டி, - 1951 ஆம் ஆண்டிலிருந்து 1995 ஆம் ஆண்டுவரையிலான தம் இல்லறவு வாழ்வுக் காலத்திடையில் - 1. சேலம் குகையில் ஒரு வாடகையிருப்பு 2. புதுச்சேரி - பெல்காம் தெருவில் ஒரு வாடகையிருப்பு – 3. கடலூர் மஞ்சக்குப்பம் - தண்ணீர்த்தொட்டி அருகிலிருந்த புதுவைச்சாலையின் 14-ஆம் எண் வாடகையிருப்பு – 4. கடலூர் - கருமாரப்பேட்டை பிள்ளையார்கோயில் தெருவில் ஒரு வாடகையிருப்பு - 5. கடலூர் மஞ்சக்குப்பம் கொத்தவால்சாவடித் தெருவில் 27-ஆம் எண் வாடகை இருப்பிலும் – 6. சென்னை திருவல்லிக்கேணி இலால்பேகம் தெருவில் ஒரு வாடகைவீட்டிலும் – 7. சென்னை திருவல்லிக்கேணி முகமதுஅபுதுல்லா தெருவில் ஒரு வாடகைவீட்டிலும் – 8. மயிலார்ப்பூர் துவாரகைநகரிலிருந்த ஒரு வாடகைவீட்டிலும் – 9. தியாகராயர்

நகரிலிருந்த ஒரு வாடகைவீட்டிலும் – 10. சென்னை மேடவாக்கம் கூட்டுச்சாலையில் இருந்த சி.கே.அடுக்ககம் என்னும் பகுதியில் ஒரு வாடகைவீட்டிலும் ஆகத், - தமக்கென ஒரு சொந்தக் குடியிருப்பை அமைத்துக்கொண்டு நிலையாக வாழஇயலாமை வாய்ந்த தொண்டுவாழ்க்கையில் தோய்ந்து அல்லற்பட்டு, - பல்வேறு காவல் உசாவல்களுக்கும் - தாம் நடத்திவந்த இதழ்கள் மீதான நெருக்கடிகளுக்கும் ஆட்பட்டுப் - பல்வேறு சட்டநடவடிக்கைகளை எதிர்கொண்டு - ஆளும் அதிகார வகுப்புக் கண்காணிப்பு இடுக்கிப் பிடியில் நெருக்குண்டு, - பல்வேறு கருப்புச்சட்டங்களுக்குத் தனியொருவராகவே ஆளாகி - 1965 இல் இருந்து 1995 சூன் 11 வரையிலாகிய தம் வாழ்க்கையினைப் போராட்டக்களமெனவே உரு சமைத்துக்கொண்டு – அவ் வாழ்க்கையுள் முதன்முதலாக இந்தி எதிர்ப்பு வினைக்கென தண்டனை பெற்று 1.11.1965 – 11.1.1966 வரையிலாக வேலூர்ச் சிறையிலும் - தமிழகப்பிரிவினை மாநாடு மதுரையில் நடத்தற்குத் தடையாக இருமுறை தளைப்பட்டு மதுரைச் சிறையிலும் (9.6.1973) – (10.6.1973 - 16.6.1973) - தமிழகப் பிரிவினை மூன்றாம் மாநாட்டைச் சென்னையில் நடத்த முயன்றபோது - அதற்கும் முந்தைய நாளிலேயே 13.7.1975 அன்றிலிருந்து 48 நாள்கள் வரையிலாக இருபத்திரு மறவர்களுடன் சென்னை நடுவண்சிறையிலும் - 1993-இல் தடுப்புக் காலச் சட்டத்தின் கீழாக (TADA) ஏழு திங்கள் அளவுக்குச் சென்னை நடுவண்சிறையிலும் - நெருக்கடிக் காலச் சட்டத்தின்கீழ் (MISA) ஓராண்டு அளவிலாகச் சென்னை நடுவண் சிறையிலும் - மனுதரும எரிப்புப் போராட்டத்திற் கலந்து பங்குபற்றியமைக்கெனக் கோவைச் சிறையிலும் (1981) - தம் 63-ஆம் அகவையில் நிகழ்ந்த உலகத் தமிழ் எட்டாம் மாநாட்டின்போது உண்ணாநோன்புப் போராட்டம் நிகழ்த்தித் தம் துணைவியாரொடும் - மூத்த மகள் பொற்கொடியொடும் தஞ்சைச் சிறையிலும் ஆகப் பதினெட்டு முறை எண்ணிக்கையளவிலாகச் சிறை புகுந்து - பல்வேறு இதழ்கட்கும், அறிஞர்கட்கும், இயக்கங்களுக்குமாகப் பதின்மூன்று என்னும் எண்ணிக்கையிலாக நேருரை தந்து - தம் வாணாளில் பெரும்பகுதிச் சிந்தனையைத் திருக்குறளுக்குள் செலுத்தி - அவற்றை அரங்குகளிலும் - சிறைவகுப்புகளிலும் ஆன்றகன்ற விரிவார்வொடு சிறக்க நிகழ்த்தி – (நீலமலையில் ஐயா நிகழ்த்திய திருக்குறள் தொடர்சொற்பொழிவுகள் 30 மணிநேர அளவினையும் கடந்தியன்றன என்பது ஈண்டுக் கருதவேண்டியவொன்று!...) சிறுகதைகள் பலவெழுதி – ''பெரியோர்கதை'' எனும் தலைப்பின் கீழ் அறிஞர் பலரின் வரலாறுகளைச் சுட்டிக்காட்டி - இதழ்க்கான ஓவியங்களைத் தாமே

சிலகால் வரைந்து வெளியிட்டு - வாணாள் முழுமையும் நெருப்பாற்றில் எதிர்நீச்சலிட்டவாறு – “ஓய்ந்திடல் இல்லை; என் உள்ளமும் உணர்வும் உயிர்ச்செறிவும்.... சலிப்பிலனாய், - மாய்ந்திடல் வரையும் உழைப்பேன் - உரைப்பேன் மக்களுக்கே!...” (தமிழ்நிலம் முகப்புப்பாடல்) – என்றும் – “எப்படியேனும் இத் தமிழகத்தை முப்படி உயர்த்திடல் வேண்டும், என் மூச்சதற்கு உதவிடல் வேண்டும்” என்றும் உறுதிகாட்டி, - அயராதியங்கிய நம் தமிழ்த்தேசியத்தந்தை பாவலரேறு பெருஞ்சித்திரப் பெரியவரைப் பற்றி - அவருடனான 25 ஆண்டுகள் இயக்கத்தொண்டுறவில் தோய்ந்திருந்த இடைப் போழ்துகளிலும் அவற்றிற்குப் பிறகு உயிர்த்துவரும் இக்காலத்தும் – அவ்வக்கால் எழுதிப் புறம்பெயர்த்த சில பாக்களைத் தொகைப்படுத்திக் கோவையாக்கி இந்நூலுள் பட்டியலிட்டுள்ளமை அவர்க்கான என் நன்றிப் படையலாகிய சிறு துளி வெளிப்பாடு ஆகுமென்பதனைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இப் படிக்கு,<br>- **அருளியார்**

# ஆக்கம் நிறைந்தேன்!..

அறிவுயின்னதெனத்தெரி யாதுழன்
றறிவுறாவடிக் கீழ்நிலை மாந்திய
நெறியிலா பல நண்பரைக் கூடியே - காலங் கழித்தேன்;

மறித்துமிவ்வுல கொருமுறை மீள்வுறா
அரியநேரம தன்அரு மையையான்
புரிந்திடாதிவண் போக்கினே னாக்கினேன் – நாளையழித்தேன்;

குறியிலாக்கொடுங் காழ்ச்செயற் கீழ்மிகச்
சரியிலாதவர் செயற்படுங் காலையும்
திரிவுறார்மனத் தீவினைத் தோளிணைந் தென்றுமிருந்தேன்;

விரிபடாதமைந் தாரறி யாமையில்
கரிமையார்ந் திருள் கப்பியு மப்பியும்
வறிஞனாயிருந் தேனெனினும்நமின்- கோலத்தமிழ்த்தேன்,

நறியதூயருஞ் ஞாலமுதன் மொழிக்
குரியனா னெனும் கோளெனின் உள்ளிடைச்
செறிவொடார்ந்திருந் தோங்கி நிறைந்ததை- என்றுமுணர்ந்தேன்;

செறிவனாயுடன் வன்மையில், திண்மையில்
பெரியனாயுளம் பெற்றிருந் தும்,உயர்
அறிவிடைப்புகுந் தார்வுற வொருவழி -யின்றியிருந்தேன்;

நெறிவிடைப்படுந் தூயநற் றேன்மொழி
உரியவேர்நிலைக் கோக்கீடு மேக்கிடுங்
குறியராம் "**பெருஞ் சித்திர னார்**" எனும் - ஆரறிவத்தேன்

நெறிமனத்தவர் ஆர்ந்திடுந் தென்மொழி
அறிவிதழ்தனை ஆளொருவர் தர
மறிவிலாப்பெரு மார்வுற நோக்கிடும் – வாய்ப்பிலிழைந்தேன்;

செறிவொடும்உயர் ஏண்மையு மேன்மையுந்
திரிபடும் நமின் தீயுளந் தீய்வுறக்
குறியொடுந் திகழ்கின்றதெ னும் அதன் – உண்மையுணர்ந்தேன்

பொறியெலாந்தனிப் பூரிப்பி லேழ்ந்தன;
விரிவடைந்துள மார்ந்து நிறைந்தது;
நெறியெலாம்நமக் கேயிது தானென – ஆக்கம் நிறைந்தேன்!

# தமிழ்ப் போராளி

இன்றைக்கு இருபத்தி ரண்டாண்டு கட்கும்முன்
அன்றையஇந் திராகாந்தி அடல்மகளாய்ப் பேயாடி
நெருக்கடியாம் நிலையொன்றை நெட்டுக்கும் நீட்டிநடுக்
கருக்கிருட்டில் இல்புகுந்து கண்டாரை மொண்டுகொண்டு
சிறைக்கூட வாயினின்று செம்மையடி யிடித்தகதை
திரைமறவுச் செய்தியன்று-தெருவெல்லாந் தெரிந்தகதை!
ஊரெல்லாம் நகரரெல்லாம் ஒவ்வொருவரும் கலங்கப்
பாரெல்லாம் உரைபரவிப் பாரித்த பரதக்கதை !

அக்கரையுள் தமிழகத்துள் அகப்படுத்தப் பட்டோருள்
தக்கபெருஞ் சித்திரரும் தளைப்பட்ட கதைத்தலைவர்!
அறிவிப்பாய் அச்சட்டம் ஆளுமைக்கு வருவதற்குச்
சரியான முந்நாள்முன் பலபடியாய்ச் சிறைப்பட்டோர்
ஒவ்வொருவ ரின்உடலும் உதையடியில் உழன்றநிலை!
அவ்விழிந்த நெருக்கடியுள் ஐயாவும் உள்ளிருந்தார்!
பலமுறைகள் சிறைகண்ட பாவலரேற் றையாவை
நலநெஞ்சத் ததிகாரத் தோரிருநல் அலுவலர்கள் -
நல்லுணர்வால் வணங்கிமிக நன்மதிப்பாய்ப் பணிபவர்கள் -
சில்லர்,- அன்று காவலர்பால் செவிநிறைத்த செய்தியொன்று!...

"அதுதான்நம் ஐயாவுக் கணுவளவும் தீதுசெய்ய
எதுபோதுங் கூடாது" - என்பதுவே! அதன்படியே
அன்னவரும் அமைந்திருந்தார்! ஆயினும்ஓர் மாலையிலே
சின்னமனம் சேர்ந்தகொடுஞ் செருக்குக்கா வலன்ஒருவன்
மன்னவராம் நம்அண்ணல் அறைமுன்பு நின்றபடி
பெயர்கேட்டி ருக்கின்றான்! "பெருஞ்சித்தி ரன்!" - எனவே
மயக்கநிலை மந்தியவன் மறுபடியும் குரலெடுத்து, -
வயவலியார் இரைச்சலுற எரிச்சலுடன் சினம்பொங்க
"இனுங்கொஞ்சம் மிகவுரக்க என்னிடம் நீ சொல்லடா!..."

அணுவெல்லாம் கொதிப்புற்ற ஐயாவே இதைச்சொல்வார்!
அடடாவோ! அடடாஅ!... "அடா!" என்னும் சொல்கேட்டேன்!
அடடாநான் என்சொல்வேன்! அஞ்செவியுள் யாரோ-நல்
வலிவாக அறைந்ததுபோல் சிவ்வென்று சூடேறி
ஒலியொன்று "ஒய்ய்!" எனவே உரத்தெழுந்து நீண்டதுவே!
அடுத்தவரி யுள்சொல்வார்!... செவிகைக்கும் சொல்லிதுவோ?!...

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு - என்பது குறள் (389)
செவி கசப்புச்சுவையை உணருமோ? உணரும்!.... எப்போது?
சில, அடாத கொடுஞ்சொற்கள் உள்விழும்போது
செவிக்கும் கசக்கும்!... என்பார், வள்ளுவர் பெருமான்!

மடுத்தசெவி கலங்கியஅம் மருட்சியுறு காலத்தும்
அவர்நெஞ்சோ திருக்குறளின் சொற்றொடரில் செழும்பொருளில்
இவர்ந்தேறித் தோய்ந்துநின்ற எழில்நிகழ்வை எண்ணுங்கள்!
எப்பொழுதும் குறளாய்வு! எப்போதும் அறிவார்வு!
எப்பொழுதும் தமிழ்த்தோய்வு! எப்போதும் நடுநின்று
எவருக்கும் எவற்றுக்கும் இம்மியும்உள் நடுங்காமல்
தவவினைபோல் தமிழ்விளைத்த தாளாளர்! தகுதந்தை!
இந்தியெதிர்த் தார்த்தமைக்கு- தமிழ்நாட்டுப் பிரிவினைக்கு -
கந்தல் "மனு தருமம்" எனும் கழிசடைநூ லொன்றுக்குத்
தீ வைத்து வெடித்தகொடி தீம்பாவைத் தணு ஈகம்
புகழ்ந்தேத்தி நின்றமைக்கு புலிகளையும் தமிழீழப்
புகழ்மணந்த போர்ச்சிறப்பு நிலைகளையும் பாராட்டி
விடுதலையே வேண்டும் என வெளிப்படையாய் உரைத்தமைக்கு -
"உலகத்தமிழ் மாநாட்டை ஊரேய்த்து நடத்தாதே; நலவளத்துத்
தமிழ்மொழியைப் பயிற்றுமொழி யாகச்செய்!"
எனக்கூறி, முன்னின்று எதும் உண்ணாப் பட்டினிப்போர்
மனம்ஒப்பிச் செய்ததற்கு - எனப் பலகால், சிறைக்கேகி
நிறைவார் மெய்ப் போராளி! நீடுசெயல் தமிழ்க்கோ! - தன்
உறைவார்ந்த போராண்மை பற்றிஓ ரிடத்துரைப்பார்!

"ஊருக்கு நல்லன செய்யும்-ஓர்
உண்மை உழைப்பின னாக
நேருக்கு நேர்நின்ற பேசும் - ஒரு
நேர்மை உளத்தின னாக
யாருக்கும் அஞ்சுதல் இன்றி ஒரு
யானை வலிமையி னோடு
போருக்கென வந்துவிட்டேன் - என்
போக்கில் மறுதலை இல்லை!"

தன்னைப் பற்றிய மானமும் - தானே
கண்ணெனப் பற்றிய தமிழ்சார் கொள்கையும்
பெரிதெனப் போற்றிய பெருமித உறவார்!

அரிதினும் அரிய பெருங்குணம் அவரிடம்
செறிந்து நின்றவோர் "தான்" எனும் தன்மை!
நெறிகளி லெல்லாம் நிறைந்தஅத் தன்மையே
அவரையே ஊக்கி அருவினைப் பாட்டினில் -
இனியஒண் முகத்தொடு குலுங்கிக் குலுங்கி
நனியின் புந்திய நல்ல சிரிப்பினில் -
முனிவினில் - அன்பின் முழுவெளிப் பாட்டினில்
கனிவினில் - உறவினில் காந்த நோக்கினில்
கருவாய் இருந்து கமழ்ந்து மணந்தது !
உருவாய் இருந்தவர் உயிரையே காட்டினார்!
தான்யார் என்பதைத் தானே இப்படி
வான்படச் சொன்னவர் வையத்தி லுண்டா?!...

("என் உடலும் உயிரும் நானும்!"- எனுந்தலைப்பில்)

"நான்ஒரு பெரும்புதிர்! தனிக்கதிர்! தமிழின
நன்மையை நாடிப் பிறந்துள நல்லுயிர்!
வான்படு கதிர்மதி வன்மையும் தண்மையும்
வந்திணை யாளுமோர் ஆட்சியுட் படும்உயிர்!"

"என்னுடை உள்ளம் தமிழ்கமழ் உள்ளம்!
என்னுடை உழைப்புஅதில் ஊன்றிய உழைப்பு"
ஓரிழை அளவும் பிறழா நெஞ்ச
ஓரியன் நான்! என உரைத்தவர் பிறர் எவர்?!...

"**என் வாழ்வும் தமிழும் ஒன்றே!...**"
"தோளுக் கென்றும் தொய்வில்லை! - என்
தொண்டுக் கென்றும் நைவில்லை!
வாளுக் கென்றும் பழுதில்லை! - என்
வாழ்வும் தமிழும் ஒன்றன்றோ?!..."
(கனிச்சாறு- தொகுதி: 3, பா. 130)

"**என் நெஞ்சம் குளிர்தமிழ் உலவிடும் நெஞ்சம்!**"
"தென்றலை நிலவினைப் பகைப்பவரே - நறுந்
தீந்தமிழ் உளத்தினைப் பகைப்பவராம் - உயர்
குன்றினைத் தழுவிடும் அருவியைப்போல் - என் குளிர்தமிழ்
உலவிடும் நெஞ்சமன்றோ?!..."
(தமிழ்ச்சிட்டு - குரல்: 7, இசை: 9-11)

**என்னுடல் தமிழ்விளையும் வயல்"**

"என்னுடல் எனதில்லை, தமிழ்விளை வயல்தான்!
என்னின்ற விளைவெல்லாம் செந்தமிழ்ப் பயிர்தான்!
இன்னலும் இடர்ப்பாடும் எனையேற்றும் படிதான்!
ஏற்றமோ இறக்கமோ எதும்வெற்றிக் கொடிதான்!"

**"என் ஒவ்வொர் அணுவிலும் தமிழ் மணம்!"**

"உயிருள்ள வரைக்கும் உடலுள்ள வரைக்கும்
ஒவ்வோர் அணுவிலும் தமிழ்மணம் - அவை
அயர்வுற்று மறையினும் ஆழ்வெளி பரவினும்
அங்கங்கும் கிளர்ந்தெழும் தமிழினம்!"
(தென்மொழி: சுவடி 18, ஓலை: 12)

**"என் தொடக்கமும் முடிவும்"**

அன்னைத் தமிழ்க்கே ஆருயிர் இயங்கலால்
என்னைப் புகழ்வதில் எள்மூக் களவும்
எனக்கு மகிழ்ச்சி ஏற்படல் இல்லை!
மனக்குகை எல்லாம் மறம்மண்டி யிருப்பதால்
இகழ்ச்சியும் புகழ்ச்சியும் எனக்குவெற் றொலிகளே!

ஆக்கம் தமிழ்க்கெனில் அகமகிழ் கின்றேன்!
தாக்கம் தமிழ்க்கோ தமிழருக் கோஎனில்
உடலும் உள்ளமும் உயிரும்நோ கின்றேன்!
விழிப்பதில் தொடங்கிடும் வினையோ பகையினை
அழிப்பதில் முடியும்! அதுவரை இயக்கம்!

என்றுநான் பிறந்தேன்? என்றுநான் இறப்பேன்?
ஒன்றும் நினைவிலை! உயிரால் அழிவிலேன்!
என்னுடல் அழியினும் என்றும்நான் இருப்பேன்!
தின்னுவ தில்லைஎனை - மண் மழை தீவளி!"
(கனிச்சாறு, தொகுதி.....)

என்ற வாறெலாம் எம்மனோர்க் கியங்கி
குன்றமும் வானும் குலுங்கும் படியாய்ப்
பாப்பல வாயிரம் பரக்கப் பாடிய
மாப்பா வேந்தராம் மாணிக்கச் செங்கதிர்!

நம்மைநம் பண்பை நன்றாக விளங்கிய
செம்மல்தான்! நம்மின் சீரிழி வார்ந்த
இனப்பகைப் போக்கொடு எழில்தமிழ் சிதைக்கும்
தனிநல நோக்கொடு தாழ்ந்த அடியராய்க்
காட்டிக் கொடுத்துக் கயமைகள் விளைத்து
மூட்டிய இரண்டகம் - முனிவர் அவரையே
வாட்டி வதைத்தது! நைந்து கலங்கிப்
பாட்டொன்று யாத்துப் பதைப்புறக் கூறினார்!...

"என்னைக் கொன்று கொண்டேன்! இவ்
இனத்தை மீட்க நின்றேன்!
சின்ன துணையும் இல்லை! - ஒரு
சிறிய உதவி இல்லை!
தன்னந் தனிய னானேன்! - என்
தாயும் இரக்கப் பட்டாள்!
முன்னில் வணங்கிச் சென்றார்! - என்
முதுகுப் புறத்தில் மென்றார்!"
(பாவலரேறு)

இவ்வகையாய்ப் பாடிடநம் இனமிங்குச் செய்ததுவே!
இவ்வகையாய் நொந்துமனம் வெந்துயிர்க்ச் செய்ததுவே!
இருந்தாலும் அவர்அவர் ஆகத்தாம் வாழ்ந்தார்!
அருந்தமிழர் அவர்வாழ்வை அடியூற்றாய் கொண்டால்
இருந்தமிழும் இந்நிலமும் இவ்வினமும் மீண்டு
திருந்தியுயர் வெய்தி நிற்கும்!திரும்பவும்நாம் எழுவோம்!

(1997-இல் செங்கல்பட்டில் பாவலரேறுஜயா அவர்களுக்கென
நிகழ்ந்த நினைவேந்தலில் அருளியார் வெளிப்படுத்திய பா.)

## பாவலரேறு பெருஞ்சித்திரனார்

"அறிவெரி அரிமான் ஏறு!
அன்பிழை கன்னற் சாறு!
நெறியுறை தமிழ்த்தாய்ப் பேறு!
நேர்மையின் இலக்குக் காறு!
செறிந்தநற் பண்பார் காழம்!
சிதைவிலாக் கொள்கை வேழம்!
குறியெலாம் தமிழ்இந் நாடு
கூன்தமிழ் இனம் நிமிர்ப்பே!

தென்மொழித் தந்தை! இன்பத்
தமிழ்நிலம் மீட்கும் போக்கர்!
இன்றமிழ் மொழிக்குத் தீங்கை
இம்மியிங் கெவர் செய்தாலும்
வன்புலிப் பாய்வோ டார்த்து
வாட்டிவாய்த் துடுக்கொ டுக்கும்
நன்மறத் திறலார்! பாக்கோ!
நயவையர்க் கிதைமுன் வைத்தேன்!

(ஆகத்து 1985)

தமிழ்- சமற்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தில் அருளி ஆற்றிய மொழியியல் உரைகள்!... (முதல் தொகுதிப் படையற்பா)

# தமிழ்த்தேசியப் போராளி பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயா

வானுறு முழுமதி யெனவொளி ரெழிலெழு
வயக்கொடு வயங்கமை முகம்!
பானுரை புரைநிறை பளிங்கணி யெயிறுகள்
பயக்குந லருங்கவி னகை!
தேனுறு குளிர்தமி ழகழ்வொடு திரையெழுந்
தெளிவொலி நிறையுரை மொழி!
கானுறு வரிநிக ரியல்வொடு மறிதருங்
கனங்கருஞ் சினந்திகழ் விழி !

**சொற்பொருள் விளக்கம்** :

(1) வானுறு : வான் + உறு
முழுமதி யென : முழுமதி + என
ஒளிரெழி லெழு: ஒளிர் + எழில் + எழு
வயக்கொடு : வயக்கு + ஒடு (ஒடு = உடன்)
வயக்கு = வசியப்படுத்துகை, வயப்படுத்துகை.
(வய் > வயி > வசி வசி +அம் > வசியம் = வயப்படுத்துகை)
வயங்கமை : வயங்கு + அமை
(வயங்குதல் : வயனாக அமைந்திருத்தல், நிலைநின்றிருத்தல்)

(2) பானுரை: பால் + நுரை (= பாலின் நுரை)
புரை : ஒப்பு புரைய = ஒப்ப (காண்க: தொல்.பொருள். உவம : 11:12)
பளிங்கு = பளபளக்கும் ஆடிக்கல். கண்ணாடிக்கல்
பளிங்கணி = பளிங்கு + அணி
எயிறு = பல்
பயக்கு (பயக்கும்) = அளிக்கும், தரும்
பயக்கு நலருங்கவி னகை : பயக்கும்+நல்+அரும்+கவின்+நகை
(கவின் = கவ்வி ஈர்க்கும் அழகு)
நகை: ஒளிச் சிரிப்பு. (நகு = ஒளிவிடு)

(3) தேனுறு : தேன் + உறு
குளிர் தமிழகழ்வொடு = குளிர் + தமிழ் + அகழ்வு + ஒடு
(அகழ்வு = அகழ்ந்து ஆயும் ஆராய்ச்சி வினை)
திரையெழும் = அலைபோல் எழுகின்ற
தெளிவொலி = தெளிவு + ஒலி ( = தெள்ளிமை நிறைந்த ஒலி)

(4) கானுறு : கான் + உறு  கான் = காடு, கானம்
வரிநிக ரியல்வொடு  வரி + நிகர் + இயல்வு + ஒடு
வரி = வரிகளையுடையதாகிய புலி, வரிமா
நிகர் = ஒத்த, (ஒத்திரு)
இயல்வு = இயலுகை, இயங்குகை, செயற்பாடு.
மறிதரும் = இப்படியும் அப்படியுமாக மறிதலைத் தருகின்ற, திரும்பித் திரும்பிப் பார்க்கின்ற, இருபக்கத்தும் வளைந்து பார்க்கின்ற
கனங்கரும் : கன்னங்கரிய
சினந்திகழ் : சினம் + திகழ் = கோவம் திகழ்கின்ற

---

## எம் எண்பத் தாண்டு ஏறே!....
## உயிருள் ஆடும் உழைப்புப் புலியே!....

பீடு வேய்ந்த பெருமி தத்துப் பெருமை சான்ற வீறொடு
வாடுந் தமிழை வலிவி லாத தமிழினத்தை-நாட்டினைப்
பாடுபட்டு மீட்டு நாட்ட நாளும் போதும் நைந்தனை!
கேடுகெட்ட இனத்தைத் தேற்றக் கெடும்ப ரிடையில் நொந்தனை!
நீடு நிலவி நெஞ்சில் கொஞ்சும் நேயத் தின்ப அன்பொடு
ஈடு சொல்ல இணையி லாத அஃகி யகன்ற அறிவொடு
மூடுறாத உரைப்பும் சிரிப்பும் சிறப்புக் கோளும் காட்டினை!
ஆடும் ஐய எம்பின் உயிருள் எண்பத் தாண்டின் இயல்விலே!

(தென்மொழி தி.பி. 2044 ஆடவை (சூன் 2013)

## எம் தேசத் தந்தை நீர்!..

(இரு தூக்காக வந்த அறுசீர் ஆசிரிய மண்டிலம்)

மாண்புத் தாட்சி மாட்சியில்
மலர்ந்து மீட்சி யெய்தவும்
தெண்புற் றோங்கித் தமிழவர்
தேற்றத் தாற்றல் தாங்கவும்
வண்மை வாய்நஞ் செந்தமிழ்
வாகை வேய்ந்து வயங்கவும்
எண்பத் தாண்டைத் தாண்டியும்
இயக்குந் தேசத் தந்தைநீர்...

(தென்மொழி தி.பி.2045 மீனம் (மார்ச்சு 2014)

## தேற்றிய தோன்றலின் நினைவொடு எழுவோம்!...

இனநலம் சிதைப்பவர் எவரெவர் - பழம்புகழ்
நனந்தலைத் தமிழ்நிலம் நலிப்பவர் எவரெவர்-
உலகொளி யாந்தமிழ் உருக்குலைத் திழிக்கும்
விலங்குகள் எவையெவை - வியத்தகு வீறு, நன்
மறத்திறத் தகைமை, நகரிகம், சால்பு
உறப்பெயர் எவற்றையும் ஒடுக்குநர் எவரெவர்- என்றெலாம்
ஆய்ந்து இழைத்திழைத் துணர்ந்து அன்றன்றும் அன்னோர் அடியறுக்
குந்தொழில் ஆற்றலே வாழ்வென் றியங்கிய ஏந்தல்!
நோற்றலே மூச்சென் நொய்யாத கொள்கையில் தோய்ந்தும் எய்ந்தும்
தொடர்வினை ஆழ்ந்தே
தேய்ந்து நமையெலாம் தேற்றிய தோன்றல்!

(தென்மொழி தி.பி. 2046 ஆடவை (சூன் 2015)

## அண்ணால்!...
## (அண்ணலே!...)

இயல்பிலே தமிழ்மண் பற்றி
ஈர்ப்பினால் தமிழுள் ஆர்ந்து
வியல்நிலத் தமிழர் மேன்மை
விழைந்(து) அவர் மீட்சிக் கோர்ந்து
அயலவர் சூழ்ச்சி யால்யாம்
அடங்கியிங் கொடுங்கி நைந்த
மயல்வெலாம் மாய்க்க - மான
மனங்கொண்டு இயன்றீர், அண்ணால்!

(தென்மொழி தி.பி. 2049 மீனம் (மார்ச்சு 2019)

## ஈக வாழ்வின் எம் மாணிக்கம்!...

தமிழ் நாட்டின் சிலைய மண்ணில்
தலைமைக் காவல் துரையரின்
அமிழ்த நெஞ்சக் குஞ்சம் மையின்
அரிய மகவு என்னவே -
அமிழ்ந்தொ டுங்கி அடிமை நொடிவில்
மிடிமை யார்ந்த பேரினம்
நிமிர்ந்தெ ழுந்து நெடிய புகழை
மீட்டுக் கொள்ளற் காகவே -
திமிர்ந்த வீச்சுத் தெளிவி னோடும்
திரண்ட அறிவு நோக்கொடும்
இமியும் கள்ளங் கரவி லாத
இனிய வலிய நெஞ்சோடும்
சிமிழின் சிப்பி யுள்ளி ருந்து
சிறந்த முத்தம் பிறந்ததே!
தமித்துப் போர்க்க ளத்தி லாடி
ஈக வாழ்வில் நிறைந்ததே !

(தென்மொழி தி.பி.2053 மீனம்(மார்ச்சு2022)

## துய்த்துய வம்மோ!....
## (துய்த்து உய வம்மோ!)

மீசை முறுக்கொடும்
மின்னொளிக் கண்ணொடும்
பாசம் நிறைந்திசைப்
பண்ணுறும் பேச்சொடும்
மாசெதும் பற்றிடாப்
பாங்கமை நெஞ்சொடும்
நேசம் மிகுந்தவெம்
**பாவல ரேறெனும்**
ஆசிலாத் துய்யநன்
றான்றபெ ரும்புகழ்
மூசிய வாணரிங்
கீட்டிய தேட்டைநந்
தேசிய மீட்சியின்
வித்ததை விளங்குக!
காசிலா மீமொழி
மேந்தமிழ் நிலமினம்
பேசிய வீறியப்
**பெருஞ்சித் திரனார்** -
வீசிய புயலவர்!
வீழ்வுதாழ் வறியார்!
தூசள வும்பிச
காதிவ ணியற்றிய
பேசரு விளைபயன்
துய்த்துய வம்மோ!....

(தென்மொழி தி,பி. 2055 மீனம் (மார்ச்சு 2024)

## திருத்தவந்து உயிர்த்த இறை!.....

அறுபத்து மூன்றகவை
அதுமுடியும் முன்பாக
இருந் திறனார் நறுநெஞ்சத்
தரியபெருஞ் சித்திரனார்
அறுபட்டுப் போனநிலை
ஆரியற்கை விளைத்த பிழை!...
ஒருப்பட்டு உரஞ்சிறந்து
உரிய உரி மையுற்று
திருபெற்றுத் தூயதமிழ்
திரும்பவுமிங் கோங்குற்றுப்
பெருந்தமிழ இனமிங்குப்
பிணைவுற்று - பீடுற்றுத்
திருந்திடமேந் தீர்வுற்று -
திகழ்ந்த புகழ் மீள்வுற்று
உருப்பெறுமுன் மறைந்தாலும் -
உரையூற்றால் பாப்பொழிவால்
கருத்துவளத் தீர்ப்பெழுத்தால்
கனல் கொதிப்பார் வினைவிதைப்பால்
இருந்து நமை யிணைத்(து)ஓயா
தெந்நொடியும் இயக்குகின்றார்!...
இரும்புளத்துப் பேருழைப்பர்!
இரும்புலத்து எல்லொளியர்!
திருத்தவந்த திடமறவர்!
தெளிவார்ந்த திண்ணடையர்!
எருவாகி,-இத்தமிழம்
உருவார உயிர்த்த இறை!...

(தென்மொழி தி.பி.2055 ஆடவை (சூன் 2024)

## சித்திரச் சிந்து

1. மிகப்பலப்பல ஆயிரம் (ஆ)ண்டுமுன்
இயற்கை முறையில் பிறந்து - வலம்
இயைந்தவாறு சிறந்து வளந்
தோய்ந்தபல்கலை நிறைந்து - நயின்
தூய தீந்தமிழ் நேயச் செம்மொழி
எழுந்தது எழில் உறைந்து!.

2. உகப்புறவுல செங்குந்தழைப்பெழ
ஊற்றறிவெலாம் ஊற்றி - உளத்
தேற்றுணர்வெலாம் நாற்றி - நலம்
வேற்றவர்க்கெலாம் ஆற்றி - இளந்
தாய்த் தமிழ்மொழி தண்ணருள் மிகத்
தந்ததிருளை மாற்றி!

3. மகம்நிறைபெறுந் தூயநற்றமிழ்
தோற்றியமுன் னோரும் - அறம்
போற்றிய பண்பும் சீரும் - மறம்
ஏற்றியபெரும் வீறும் - உரஞ்
சார்நகரிகம் சால்பகம் நிறைந்
தார்த்தனர்நாள் தோறும்!

4. தகதகவென முகமகமொளிர்ந்
தினியவாழ்வில் தோய்ந்து - மனங்
கனிந்து மேன்மை வேய்ந்து - நிலம்
அணிந்த மன்னினம் ஆய்ந்து - இம்மி
இகலிலாது எவரும் உறவர்
என்றறைந்தன ரேய்ந்து!

5. நெகநெகவென வெண்ணிறத்தொடு
தவளைவறளைக்குரலார் - அயல்
எவ்வனநாட்டுத் திரளார் - கடுந்
தெவ்வர் நிகரும் நிரவார் - வறுந்
திரிபுரியொடு திரண்டிறங்கினர்;
இரங்கினார் நம்விறலார்!

6. தகவுறைநமின் தார்வேந்தர்தம்
தனிவேட்பினைத் தணித்தார்! - புலத்
தனிச்சிந்தனை துணிந்தார்! - புல்லர்
முனைப்புக்கிணங்கப் பணித்தார்! - புல்லித்
தளர்ந்தவேந்தர்நம் மானத்தையிவர்
தாளடிக்கீழ்க் குனித்தார்!

7. அகப்பட்டடங்கி யமைந்த கோக்கள்
அந்த அரங்கினில் திளைத்தார்!- பார்ப்புச்
சொற்படி கடவுள் முளைத்தார்!- அங்குக்
குருக்கள்ஏறி நிலைத்தார்! தொங்கும்
உச்சிக்குடுமியர் மந்திரம் உமட்டி
ஊரார்க் காதைத் துளைத்தார்!

8. பகவன் - கடவுள் பரணில் உள்ளான்!...
நிலத்துக் கடவுள் நாங்கள்! - பன்னி
வணங்கவேண்டும் நீங்கள்! - என்ன,
ஏதெனக் கேளாது போங்கள்! - இதை
எதிர்த்தார்த்திடின் ஆளும் இறைவன்
இறக்கச் செய்வான், சாங்கள்!

9. வகலுறுத்திய வண்ணத்தின்படி
வகைநான்கினர் யாரும் -ஆகும்
நுண்பலசில கூறும் - சாதித்
தகைமைக்கேற்பச் சாரும் - முறை
சேர்த்தியங்குக-நூற்படியெனக்
குரைத்தனன்! (இ)ன்றோ, நாறும்!

10. பகவன் புரிந்து பயனைத்திருப்பி
யடிக்கும்தேவ மொழிதான்! - எங்கள்
குடிக்குளதாய் மொழிதான்!- சமற்
கிருதமது(எ)ம் விழிதான்! - என்றே
கலக்கலாயினன் - கவின்நில முதல்
தமிழும் வீழ்ந்தது - குழிதான்!

11. பகவுற - தமிழ் பகவுற - இனம்
சிதைவுறப்பல தீங்கை பார்ப்பு
விதை வித்திய போங்கை - இனம்
பதறிச் சிதறும் பாங்கை -இன்றும்
பதைபதைப்புற விதிர்விதிர்ப்புறப்
பார்க்கும் - நாமோ, மூங்கை!

12. நகலுறும்படி மானங்கெட்டது -
நாணங்கெட்டது நாளும்! - தமிழ்
மானங்கெட்டது! ஆளும் - நாடு
கோணம்பட்டது மேலும்! - இனம்
நாறிச்சிதறிக் கூறுகெட்டது
நசிந்தயர்ந்தது தோளும்!

13. மிகமிகமிக மொழியுமினமும்
நாளுஞ் சிதைந்த போது - பலர்
நாளுங் கவன்று(அ)த் தீது - தனை
மாளும் படிக்குத் தோது - நாடி
மேலும் மேலும் முயன்றுழைத்தனர்
தம்துயர்பா ராது

14. அகத்தெழுஞ்சுடர்த் தீக்கொழுந்துடன்
மானம் மீட்கும் போரில் - பேர்ம்
பெரியார், - இணை நேரில் - அரு
மறைமலை, மேலுங் கூறில் - திரு
வி.க., அண்ணா, பாவேந்தெனப்
பலரியங்கினர் - பாரில்!

15. துகளறுநறுந் தூயதொண்டர்கள்
ஆற்றிய வினை நாட்டில் - உரம்
ஏற்றியதிங்குக் கூட்டில் - மானம்
மேற்கெழுந்தது மேட்டில் - மேலும்
நோற்றிடப்பலர் வேட்டெ ழுந்தனர்
சாற்றிடும்படி யேட்டில்!

16. நிகரிலாவுயர் தேவநேயப்
பாவாணர்மா ணாக்கர் - உயர்
பாவேந்தர்நேர்ப் போக்கர் - வளப்
பாவேந்தெழில் நாக்கர் - **பெருஞ்**
**சித்திரனார்**எனும் பாவலரேறுவிப்
பணியிடையோர் நோக்கர்!...

17. புகழேந்திய சிலையநகரில்
பொன்னம்பலக்கல்வி யியன்று - தமிழ்ப்
பாவேந்துப்பாமிசைத் தயின்று - தந்தைப்
பெரியவர்கோள் பயின்று - தொண்டு
புரியத் தமிழ மானம்மீட்கத்
தென்மொழி தோற்றினர், முயன்று!

18. இகழ்நீக்கிட இனங்காத்திட
மொழிமீட்டிட முனைந்து - தமிழ்
விழிப்பியைத்திட வினைந்து - மிக
விழிவினச் சேற்றில் நனைந்து - சற்றும்
இளைப்பிலாதுங் களைப்பிலாதும்
இயைத்தியங்கின ரினைந்து!

19. இகல்மனத்தமி ழினவுட்பகை
இழித்துப்பழித்த காலும் - கால்
இழுத்தழுத்திய நாளும் - தமிழ்
முழுத்தும்விளைத்து மூளும் - போர்க்
குணந்தோய்ந்திட வினம்மேம்பட
வேயுரைத்தனர் சூளும்!

20. நகத்தகுதிறநயனில் இந்தியை
நடுவண்பார்ப்பு நுழைத்தார் - தமிழ்
படுகிடைப்பட விழைத்தார் - நாம்
கெடும்புறவினை பிழைத்தார்! - செயல்
நடப்பெதிர்த்தவர் அரசலுவலும்
இழந்தும் - பகை யழைத்தார்!

21. அகத்துறைந்திடும் ஆண்மை யாற்றல்
அறிவுதுணிவு கொள்கை - கொண்டு
செறிவுறத் தொண்டு நல்கை - என்னின்
நெறி; நல்லுறுதி வெல்கை - என்றே
ஆயிரமாயிரம் உரைஎழுத்திங்கு
ஆற்றிடச் சேர்ந்தன, பல்கை!

22. மிகப் பன்முறை அடக்குறுத்தினர்;
தடைசெய்தனர் உரையை! - போர்
நடைதடுத்தனர்; முறையைச் சொல்லின்
படையெடுத்தனர் சிறையைப் - பல
முறைகாட்டியும் அசைத்திடமுடி
யாதயர்ந்தனர் இறையை!

23. முகமுழுதொளி சிவக்குஞ்சினத்தில்
மூட்டிய இன - விழிப்பும் - முறை
காட்டிய மொழிச் செழிப்பும் - நனி
தீட்டிய உரைக் கொழிப்பும் - இனி
முழுவுலகிலிங் கெங்குக்காண்போம்?
எங்ஙன்தீர்வோம், பழிப்பும்!...

24. வறிய நிலையிற் செம்மைவாழ்வை
வாழ்வதெப்படி யென்றும் - பகைச்
சூழ்வையெதிர்த்து வென்றும் - நெறி
யாழ்வில் தோய்ந்து ஒன்றும் - உயர்
உறுதிப்பயனை விளைத்துநின்று
உவமையானார், சென்றும்!

25. உரிமைநிலையை விடுதலையினை
மானவுணர்வை நாணை - விள்ள
விளக்கியபெரு மானை - உளந்
துலக்கிவளர்த்த கோனை - நெஞ்சி
லேந்தியேந்தல் ஏற்றுரைதொடர்ந்
தேற்றெழுவோம்!.... ஆணை!

# நினைவகம் ஒன்றை நீடுறச் சமைக்க உறுதுணை வேண்டி....

அஞ்சா நெஞ்சுரம்; அஃகி யகன்ற
செஞ்சீர் அறிவகம்; செழுங்குளிர் அன்பு
நேரிய போக்கு; நெடுஞ்செம் மாப்பு;
கூரிய நோக்கு; கொடும்பொறை ; மலைநிலை;
தொடரீடு பாடு; தோய்வார் கடமை;
அடற்குணம்; அலைவிலா அரும்பெரு மனத்தொடு
நம்மொழி நந்நிலம் நந்நா டெனும் இவை
செம்மையும் சீர்மையும் செறிந்தநல் விடுதலை
ஏற்றிடற் கென்றே ஏற்றநற் கொள்கையை
ஏற்றநம் ஏற்றப் பாவலரேறு, இவண்
நாற்பது ஆண்டுகள் நமக்கென நலிந்து
மேற்குக் கதிரென மேடவாக் கத்தில்
அறுபதிற் கைம்பதாம் அடியக மடியில்
உறுநறும் பொன்னுருக் கரந்துறைத் துறங்கித்
தமிழுற வுணர்வார் தம்அகம் உலவுறும்
அமிழ்தப் பெருஞ்சித் திர-அரி' அவர்க்கே
நினைவகம் ஒன்றை நீடுறச் சமைத்து
வினைநீண் டியங்கிட வேண்டிய உளத்தொடு
உங்கள் உறுதுணை உறவேண்டி யிதனைப்
பொங்கிப் பொருங்குமை வமைகுமு றல்மிக
அடக்கிக் கடமை அகத்தெழ முற்படத்
தொடக்கி நிற்கிறோம்; தொண்டுளங் கனிந்து - உம்
பங்கினை வழங்கிப் பயன்பரப் புமாறே!....

## தலை சிறந்த தமிழ்க் குலத்தீர்!... விலை மதிப்பில் விளைவெழுத்தை விலை தந்து துணை தருக!...

மலையூரில் பிறப்பெடுத்து - மருவிலராந் தாய்தந்தை
நிலைநிழலில் பண்பறிந்து - நெறிகல்வி பயின்றொன்றி -
விலைபோகாப் புலவரிடை பகுத்தறிவுப் படிப்பார்ந்து -
துலைமனத்துப் பாவாணர் பயனைநிலம் சார்ந்துயர
உலைவிலராய்க் களங்கண்டு ஒருநொடியும் ஓயாதே -
அலைகடல்சார் தமிழ்ப்புதுவைப் புலத்திறத்துப் பாவேந்தர்
கலைத்திறநூல் மனந்தோய்ந்து வளையாத வலிமையொடு
வளத்தமிழை - தமிழினத்தை விளைவியல்வில் சால்பியல்பில்
குலைவில்லாத் தமிழ்நிலத்தைக் குறைவில்லா நிலைக்குயர்த்த
நிலைத்தகருத் தகத்திருத்தி நினைப்பொன்றி - உயிர்ப்பொன்றி
விளைபயனுக் குழைப்பெடுத்து வீறுதமிழ் வித்தூன்றி
இலைஎமக்குச் சோர்விலைகாண்! இனிமேலெம் இனமேறும்!
அலைகடல்போல் தமிழாரும்! அருந்தமிழ்மண் வளப்பமுறும்!
திளைக்கும்நலம்! விளைக்கும்புகழ் வெற்றிநமர்க் குறுதியென
விலைமதிப்பில் தென்மொழியை - வீறெழுப்புந் தமிழ்நிலத்தை
நிலைசிறக்கச் சிறார்க்காகும் நிலவெளிமைத் தமிழ்ச்சிட்டைத்
தலைசிறக்க வுருவாக்கித் தந்தவுரத் **தமிழ்த்தந்தை** -
சிலையத்துச் செழும்புலவர் - **சீர்த்தபெருஞ் சித்திரனார்**
நிலையாக நாமெழற்கே நெடுங்காலம் எண்ணியன
குலைக்கொத்தாய் முழுநிறைவாய் நூல்தொகுப்பாய் வந்துளது!...
நிலைமானத் தமிழ்க்குலத்தீர்! நெஞ்சினிக்கும் இத்தொகுப்பை
விலைதந்து வாங்குதற்கே விழைவாரத் துணைதந்து
நிலைத்தூணாய் நிற்பீர்! - என நெகிழ்ந்தும்மை வேண்டுகிறோம்!

சிலையம் = சேலம்

## நறுந் தொகைக்குத் தருக, பொருள்!....

நம்தமிழை நம்நிலத்தை
நம்மினத்தை மீட்டுயர்த்தச்
செம்புகழ்நேர் சீர்தமிழில்
செம்பாதி நூற்றாண்டை
இம்மண்கண் செலவிட்டே
இயங்கிய பேர்ஞ் சித்திரனார் -
செம்பொருளார் நறுந்தொகையைச்
சேர்ந்தொன்றாய் நீர்பெறுவீர்!
உம்பொருளைத் தருக! அது, -
உம்கடன்,ஆம்! எம் தமிழீர்!......

## வாங்கிப் பெருமையுறுக!...

அமைதியொளி அறிவுகனல் அன்புமறம் ஆன்றொளிர
இமையமன மாணிக்கம் இவ்வுலகில் நமக்கெனவே
இனியபிறப் பெடுத்துநமின் இனம்மொழியை - நாடிவற்றை
இமையாது மீட்கவொரு பூட்கையொடு பூரித்து
இயங்கியியங் கித்தேய்ந்து எழுதியெழு தித்தோய்ந்து
சமைத்தளித்த நறுஞ்சேதிச் சாறுபதி னாறன்தொகை
சந்தைக்கே வந்துளது! சொந்தவினச் சொத்திதனை
நமைநாமே காத்திடற்கே தொகைதந்து கடனாற்றும்
நற்பணியிற் பங்குபெற நம்மவரை வேண்டுகிறோம்!
சுமையில்லா - பிறழ்வில்லா - துயரில்லா நமர்வாழ்வுச்
சூழலினை மீட்டெடுக்க, சுவைநலத்தைத் துய்த்துவக்கக்,-
குமைவாரிக் குடிநிலையை மீட்டுயர்த்த, - கடுகியுடன்
கூர்த்தவுணர் வார்த்துசெயல் தேர்ந்து பயன் நேர்க!-என
உமைமீண்டும் வேண்டுகிறோம்! உடன்வாங்கிப் பெருமையுறும்
உயர்மீட்சி யுற்றெழவே உளங்கனிந்தின் றுதவுகவே!

....